**மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**<u>அசல் வழக்கு எண்.1268/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| **சாட்சியின் பெயர்** | காளிதாஸ் | **மதம்** | இந்து |
| **த/பெ** | ஆதிமூலம் | **தொழில்** | ---- |
| **சாட்சி எண்.** | வா.சா.1 | **வயது** | 62 |
| **ஊர்** | அசோக் நகர், மேற்கு மாம்பலம் | **மாவட்டம்** | சென்னை |

11.08.2025 அன்று 1873ம் ஆண்டு சட்டம் 10ன்படி என்னால் உறுதி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது

**விசாரணை தொடங்கும் நேரம்** : காலை 11.45 மணி

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் 05.09.1990 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆகும். (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். 07.01.2020 தேதியில் தாவா சொத்தை என்னுடைய மனைவி நீலாவதி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் கணிணி நகல் வா.சா.ஆ.2 ஆகும். 07.05.2021 அன்று எனது மனைவி இறந்ததற்கான 29.05.2021 தேதியில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழின் கணிணி நகல் வா.சா.ஆ.3 ஆகும். மேற்படி இறந்துப்போன எனது மனைவியின் வாரிசு சான்றிதழின் நகல் வா.சா.ஆ.4 (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஆகும். தாவா சொத்திற்கான கணிணி பட்டா வா.சா.ஆ.5 ஆகும். தாவா சொத்தின் வழிகாட்டி மதிப்பீட்டின் பதிவேடு கணிணி நகல் வா.சா.ஆ.6 (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஆகும். தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் கணிணி நகல் வா.சா.ஆ.7 ஆகும். தாவா சொத்திற்கான அ-பதிவேட்டின் கணிணி நகல் வா.சா.ஆ.8 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**விசாரணை முடிவுற்ற நேரம்** : காலை 11.52 மணி

அவையறிய இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, பின்னர் சாட்சி சொன்ன பதில் சரியென சாட்சியால் ஒப்புகொள்ளப்பட்டு, என் முன்பாக கையொப்பம் இடப்பட்டது.

(ஒம்).S.ஜீவநந்தினி,

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,

விழுப்புரம்.